## உள்ளூர் ஆட்சிச் சேவை

### தரம் 2, இடுகாட்டுப் பொறுப்பாளர் பதவி

மேற்படி பதவிக்குரிய விண்ணப்பங்கள் உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபையினால் கோரப்படுகின்றன.

2. **வேதனம்.**—இப்பதவிக்குரிய திரட்டிய வேதனம் வருமாறு—வருடாந்தம் ரூ. 3,000—17 × 90—ரூ. 4 530. வருடாந்தம் ரூ. 3,810 பெறுமுன் வினைத்திறமை காண் தடையுண்டு.

3. **வேண்டிய தகைமைகள்.**—(அ) 28.7.1970 ல் 21 வயதுக்குக் குறையாமலும் 25 வயதுக்கு மேற்படாமலும் விண்ணப்பதாரர்கள் இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர்கள் சிரேஷ்ட பாடசாலை சான்றிதழ்ப் பரீட்சை அல்லது பொதுக் கல்விச்சான்றிதழ் பரீட்சையில் 6 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். பொ. க. சா. பரீட்சையில இரு தடவைகளுக்குள் சித்தியடைந்திருக்க வேண்டும். மூன்று பாடங்களில் திறமையுடன் சித்தியடைந்திருக்க வேண்டும். அவற்றில் இரண்டு சிங்களம்/தமிழ், தாவரவியலாய் இருத்தல் வேண்டும்; அல்லது சமமான அல்லது உயர்தரப் பரீட்சையில் இப்பாடங்களுடன் சித்தியடைந்திருக்க வேணடும்.

(இ) தோட்டம் செய்தல், தொழிலாளர் கட்டுப்பாடு போன்றவற்றில் போதிய அறிவும் அனுபவமும் இருத்தல் வேண்டும்.

4. இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளம் பெறுதற்குமுரியது. தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தி முதலில் கொழும்பு மாநகரசபையில் பொது சுகாதார திணைக்களத்துக்கு முதலில நியமிக்கப்படுவார். கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் அவர் வசிக்க வேண்டியதாகும்.

5. இவ்வர்த்தமானியின் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் உள்ளூர் ஆட்சிச சேவைப் பதவிகளுக்குரிய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

6. நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்ட படிவத்தில் கண்டவாறு விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 28.7.1970 கருப் பிந்தாமல் எனக்குக் கிடைக்கும்படி அனுப்பப்பட வேண்டும். குறிப்பிடப்படும் படிவத்தில் 13 வது விடயத்திற்குப் பதிலாகப் பின்வருபவை சேர்க்கப்பட வேண்டும் :—

"13—தோட்டத் தொழில், தொழிலாளரைக் கட்டுப்படுத்துதல் போன்றவற்றில் உள்ள அனுபவம், ஏதுமிருந்தால்— "

(மேற்படி அனுபவத்துக்கு அத்தாட்சியாகவுள்ள சான்றிதழ் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்.)

7. விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை (மூலம் அல்ல) அனுப்ப வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச்சான்றிதழ் (ஞானஸ்நானச் சான்றிதழ் அல்லது உதவிப் பாடசாலைகளின் பிரமாணக் கோட்பாடுகளுக்காக வினியோகிக்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

(ஆ) பெற்ற ஆகக்கூடிய உயர்கல்விச் சான்றிதழ்.

(இ) தோட்டத்தொழில், தொழிலாளரைக் கட்டுப்படுத்துதல் போறை வற்றில் அனுபவம் பெற்றதற்கு அத்தாட்சியாகவுள்ள சான்றிதழ்கள்.

8. விண்ணப்பங்களும் அவை சம்பந்தமான கடிதத் தொடர்புகளும் உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபைச் செயலாளருக்கு முகவரியிடப்படவேண்டுமேயன்றி, இத்திணைக்களத்திலுள்ள எந்த ஒரு உத்தியோகத்தருக்கும் நேரடியாக அனுப்பப்படக்கூடாது.

9. அரசாங்க சேவையிலோ அல்லது உள்ளூராட்சிச் சேவையிலோ வேலைபார்க்கும் உத்தியோகத்தரிடமிருந்து வரும் விண்ணப்பப் பத்திரங்கள் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இக்கந்தோருக்கு வந்தால் அவ்வுத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ தமது விண்ணப்பங்களைப் பகுதித் தலைவர் அல்லது மாநகரசபை ஆணையாளர், உள்ளூர் ஆட்சி மன்றத் தலைவர் ஆகியோரிடம் சமர்ப்பித்திருந்து, அப்பகுதித் தலைவர் அல்லது மாநகரசபை ஆணையாளர், உள்ளூர் ஆட்சி மன்றத் தலைவர் ஆகியோர் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி, விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சிபார்சு செய்தாலன்றி, அவ்வுத்தியோகத்தர்களின் விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

10. தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் விண்ணப்பப் பத்திரம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படும்.

டி. விஜேசிங்க,
செயலாளர்,
உ. ஆ. சே. அ. ச.

உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபை,
த. பெ. 530, கொழும்பு 1.
3 .6.1970

7-412—10.7.70 ந திகதிய வர்த்தமானி இல. 14,914

---

## உள்ளூர் ஆட்சிச் சேவை

### கணக்காளர் பதவிகள்

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபையினால் கோரப்படுகின்றன.

2. **வேதனம்.**—இப்பதவிக்குரிய வருடாந்தம் திரட்டிய வேதனம் வருமாறு :— ரூ. 6,720—11 × 360—ரூ. 10,680.

3. பின்வருபவர்களிடமிருந்து வரும் விண்ணப்பங்களும் கருத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

(அ) 28.7.70 இல் 6 வருட சேவையைப் பூர்த்தி செய்த உள்ளூராட்சிச் சேவையிலுள்ள தரம் 1, தரம் 2 கணக்குப் பதிவியலாளர்கள்.

(ஆ) 28.7.70 இல் செயலாளர்களாகப் 10 வருடங்களுக்குக் குறையாத சேவையுடைய உள்ளூராட்சிச் சேவை தரம் 1 முதல் தரம் 5 வரையுமுள்ள செயலாளர்கள்.

(இ) 28.7.70 இல் இலிகிதர் சேவையில் (கி. ச இலிகிதர் சேவையிலும் உதவி இலிகிதர் சேவையிலும் உள்ள சேவையைப் 10 வருட சேவையில் சேர்த்துக் கொள்ளலாம்) 10 வருட சேவைகளைப் பூர்த்தி செய்த உள்ளூராட்சி எழுதுவினைஞர் சேவையிலுள்ள (எல்லாத் தரங்களும்) உத்தியோகத்தர்கள்.

(ஈ) 28.7.70 ல் சிறுப்பராகப் 10 வருட சேவையுள்ள உள்ளூராட்சிச் சேவைச் சிறுப்பர்கள்.

(உ) 28.7.70 ல் 10 வருட சேவைக்குக் குறையாமல் உள்ளூராட்சிச் சேவையில் தொழில், தொழில் நுட்பப் பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்கள்.

(ஊ) கணக்கியலை ஒரு பாடமாகக் கொண்டு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றில் பொருளாதாரத்தில் பட்டம் பெற்ற பட்டதாரிகள்.

(எ) 28.7.70 ல் பண்டகசாலைப் பொறுப்பாளராகப் 10 வருட சேவையுள்ள உள்ளூராட்சிச் சேவை பண்டகசாலைப் பொறுப்பாளர்கள்.

4. தகுதியுள்ள பரீட்சார்த்திகள் எழுத்துப் பரீட்சை ஒன்றிற்குத் தோற்ற வேண்டும். பாடத்திட்டம் வருமாறு :—

### தாள் (1)—3 மணித்தியாலங்கள்

#### செலவுக்கணக்கு முறை உட்படக் கணக்கியல்

இரட்டைப் பதிவுகணக்குப் பதிவியலின் கோட்பாடுகளும், நடைமுறையும் :

உற்பத்தி, வியாபார நய நட்டத் தயாரித்தலும், அளித்தலும், வரையறுக்கப்பட்ட பொறுப்பு ஸ்தாபனங்களினதும், ஏனைய வித வியாபார ஸ்தாபனங்களினதும் ஒதுக்கீட்டுக் கணக்குகளும், ஐந்தொகைகளையும் தயாரித்தலும் அளித்தலும். கட்டு நிதிமுறை, முதலும் வருவாயும், பிழைகளைத் திருத்தல், ஏற்பாடுகள், ஒதுக்கல்கள், ஒதுக்கிய நிதிகள், தேய்மானக்கோட்பாடு கணக்குகளைப் பார்க்கும் முறைகள், மாற்றுண்டியல் பற்றிய வங்கிக் கணக்குகளை இணங்கச் செய்யும் அறிக்கைகள்.

சறுக்குமுறை, சொரியலான பக்கங்கள், அட்டைப் பேரேடுகள், பத்திக் கணக்குப் பதிவியல் தானே சமனமாக்கும் பேரேடுகள், பூர்த்தியாகாத பதிவுகள், பற்றுச் சீட்டுகள், கொடுப்பனவுகளிலிருந்து கணக்குகள், வரவு செலவுக் கணக்குகள், அனுப்புப்பொருட் கணக்குகள், (நட்ட இழப்பை உட்படுத்தியது) இரட்டைக் கணக்குகள் முறை, பங்குதாரக் கணக்கு (குட்டில், கலைத்தல், உட்படுத்தியது) கூட்டு முயற்சிகள், வரையறுக்கப்பட்ட ஸ்தாபனங்களின் கணக்குகள் திணைக்களத்து கணக்குகள், கேள்வுக் கொள்வனவுக் கணக்குகள், வேத்துரிமைகள், இயாந்திரிகக் கணக்குகள்.

#### செலவுக் கணக்கு முறை

செலவுக் கணக்கு முறையின் அர்த்தமும் நோக்கமும், செலவுக் கணக்குமுறை உறுதிப்பொருட்கள், பொருட்கள், தொழில், மேற்தலைப்புகள், வரவு செலவுக் கட்டுப்பாட்டு உறுதிப்பொருட்கள், தராதரப்படுத்தப்பட்ட செலவுக் கணக்கு முறைக்கணக்குப் பார்த்தல்.

### தாள் (2)—2½ மணித்தியாலங்கள்

#### உள்ளூர் ஆட்சி—நிதி உட்பட நிதியறிவும் கணக்குப் பரிசோதனையும்

கணக்குப் பரிசோதனைப் பொதுக் கோட்பாடுகள், கணக்குப் பரிசோதனையின் நோக்கமும், விஸ்தாரமும், வவுச்சிங் முறைகளும் உத்தியும், சோதனை சரிபார்த்தல், கணக்குப் பரிசோதகத்திட்டங்கள், காசுப்புழங்கல் கணக்குப் பரிசோதனை, வியாபார புழக்கம், ஆளுக்கல்லாத பேரேடுகள், இருப்பும் பொறுப்பும் சரிபார்த்தல்.

